# தி.மு.க.வின் பவளவிழா நிறைவு ஆண்டு:

# ஒரு பண்பாட்டு அரசியல் இயக்கத்தின் நெடும் பயணம் 4

நேற்றைய தொடர்ச்சி...

**"ஏழை மக்களிடம் ஏதோ ஒரு தெளிவில்லாத அனுதாபம் என்பதைத் தவிர எம்.ஜி.ஆருக்கு என்று தனியான ஒரு அரசியல் தத்துவமோ அல்லது சமூகக் கொள்கையோ இருந்தது என்று கிடையாது. பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்குவது போன்ற திட்டங்களைத் தவிர வேறு எந்தத் திட்டமும் அவரிடம் இருந்ததில்லை. அவரது ஆட்சியில் ஏழைகள் மேலும் ஏழைகளாயினர். இருப்பினும் உண்மையில் தாங்கள் பின்னடைந்து வந்துள்ள போதிலும் முன்னேறி வருவது போன்ற ஒரு மயக்கத்திற்கு - மாயைக்கு மக்கள் ஆளாயினர். எம்.ஜி.ஆரின் உடல்நிலை மோசமானபோது இந்த மாயை மேலும் தீவிரம் அடைந்தது.**

**அவர் மரணமடைந்தபோது துக்கம் கொண்டாடிய கும்பல்கள் சென்னை நகரத் தெருக்களில் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டன. போரில் சிக்கி சீரழிந்த நகரம் போல் சென்னை நகரம் காட்சியளித்தது என்று ஒரு நிருபர் வர்ணித்தார். இறுதியாகப் பார்க்கப் போனால் எம்.ஜி.ஆர். தமக்குப் பின்னால் விட்டுச் சென்று இருப்பதுதான் என்ன? அபாயகரமான ஓர் அரசியல், நிர்வாகச் சூழ்நிலையைத்தானே!**

**கவர்ச்சி என்பது, ஒருவர் தமக்குப் பின்னால் வாரிசுரிமையாக மற்றொருவருக்கு மாற்றிக் கொடுத்து விட்டுச் செல்லக் கூடிய பொருள் அல்ல. பொதுஜன அனுதாபத்தைப் பயன்படுத்திக் கொண்டே சிறிது காலத்திற்கு வேண்டுமானால் வாரிசுகள் காலந்தள்ள முடியும். அதற்குப் பிறகு? அனைத்திந்திய அளவில் இப்படி ஒரு எம்.ஜி.ஆர். தோன்றிவிட்டால் என்ன நடக்கும் என்பதை எண்ணிப் பார்க்கவே நடுக்கமாய் இருக்கிறது"**

இப்படி எம்.ஜி.ஆரை பத்திரிகையாளர் கே.ஆர். சுந்தர்ராஜன் படம் பிடித்துக் காட்டினார். இப்படிப்பட்ட எம்.ஜி.ஆர்.தான் 1977 முதல் 1987 வரை பத்தாண்டுகள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தார். அந்தப் பத்திரிகையாளர் எடுத்துக் காட்டியதிலிருந்து இவர் என்ன சாதனை நிகழ்த்தி இருக்க முடியும்? கலைஞரைப் போல் எம்.ஜி.ஆர். சாதனைகளை நிகழ்த்தி இருக்க முடியுமா? தி.மு.க.வைப் போல அ.இ.அ.தி.மு.க. தான் இருக்க முடியுமா என்ன ?

1976 ஜன. 31-க்குப் பிறகு 1989-ஆம் ஆண்டு தேர்தலைச் சந்திக்கிறவரை - 14 ஆண்டுகள் கழகத்தை எம்.ஜி.ஆரின் 'மாயைக்கு' எதிராக அரசியல் மற்றும் கட்சியை முன்னெடுத்துச் சென்றது கலைஞரின் மாபெரும் சாதனையாகும். இது அவருக்குக் கடுஞ் சோதனையான கட்டமாகும்.

ஜானகி எம்.ஜி.ஆர். பதவியை இழந்த மறுமாதம் 1988 பிப்.1 ஆம் தேதி தி.மு.கழகத்தின் 8-ஆவது தேர்தலில் 5-ஆவது முறையாகக் கழகத் தலைவராகக் கலைஞர் தேர்ந்தெடுக்கப் பட்டார். பிப்.15-இல் கழக நிர்வாகக்குழு கூடியது. சில போராட்டங்களைக் கழகம் மேற்கொண்டது.

ஈழத்தில் இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகளைக் கண்டனம் செய்து கழகத்தினர் பிப்.20-இல் கலைஞர் உட்பட உண்ணாநோன்பு மேற்கொண்டனர். பிப்.25-இல் தாளடி சம்பாவைக் காப்பாற்ற தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் அறப்போர், மார்ச் 1-இல் நெசவாளர்க்குப் பேரணி நடத்தப்பட்டது. பிரதமர் இராஜீவைப் பதவி விலகக் கோரி முழு அடைப்புக்கு கழக ஆதரவு எனக் கலைஞர் போர்க்களத்திலேயே முகாமிட்டிருந்தார்.

ஆளுநர் ஆட்சியின் போது கழகமும் கம்யூனிஸ்டுகளும், இணைந்து பல போராட்டங்களை நடத்தின. காங்கிரஸ் தமிழகத்தில் ஆட்சியைப் பிடிப்பதற்கு திட்டமிட்டு குடியரசுத் தலைவரின் ஆட்சியை அமல் படுத்தியது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பிரதமராக இருந்த இராஜீவ் 11 முறை தமிழ்நாட்டிற்கு வந்து சுற்றுப்பயணங்களை மேற்கொண்டார். தினமணியும் இந்தியன் எக்ஸ்பிரசும் வழக்கம்போல் தி.மு.க.வுக்கு எதிராக நின்றன.

1988 நவம்பருக்குள் இரண்டு முறை தி.மு.கழக நிர்வாகக்குழு கூடியது. அதில் தேசிய முன்னணி அமைப்பது குறித்தும் தமிழ் ஈழ மண்ணிலே - தமிழ் இனத்தைக் கருவறுக்கத் துணை போகும் இந்திய அமைதிப் படையின் அக்கிரமம் குறித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அக்டோபர் மாதம் முதலே தேர்தலுக்கான வேகம் தி.மு.க.வில் தோன்றி விட்டது.

இதற்கிடையில் தேர்தலைத் தள்ளி வைக்கப்போவதாகச் செய்திகள் உலாவின. இதனால் 17.11.1988-இல் கூடிய பொதுக்குழுவில் 'தேல்தலை தள்ளி வைத்தால் போராட்டம் வெடிக்கும்' என்று கலைஞர் தீர்மானம் நிறைவேற்றினார். எனினும் தேர்தல் நாள் அறிவிக்கப் படவில்லை.

ஆனால் தி.மு.க. தேர்தலின் அடிப்படை பணிகளைச் செய்து கொண்டே இருந்தது. தி.மு.க., காங்கிரஸ், அ.தி.மு.க. (ஜெ), அ.தி.மு.க. (ஜா) என்கிற கட்சிகள் தனித்தனியே தேர்தலில் போட்டியிடும் என உறுதியாகத் தெரிந்தது.

இக்கட்சிகளில் தி.மு.க. மட்டுமே தனது தோழமைக் கட்சிகளான இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி, மார்க்சிஸ்ட்டு, அகில இந்திய முஸ்லிம் லீக், ஜனதா தளம் ஆகிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்துக் கொண்டது. மற்றக் கட்சிகளில் பெருங்குழப்பங்கள் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் வரையும் நீடித்தன.

தி.மு.க.வில் 4206 வேட்பாளார்கள் விண்ணப்பித்து இருந்தனர். 1988 டிச.1 முதல் 12 வரை தலைமைக் கழக நிர்வாகிகள் அந்தந்த மாவட்டச் செயலாளர்களுடன் அமர்ந்து வேட்பாளர்களைத் தேர்வு செய்தனர். தி.மு.கழகத்தில் வேட்பாளர் தேர்வு முடிந்திருந்த நிலையில் தேர்தல் நாள் 21.01.1989 என்று அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டது. கலைஞர் மேலும் சுறு சுறுப்பாகிவிட்டார்.

1989-ஆம் ஆண்டு சுறுசுறுப்போடு பிறந்தது, இந்து, இந்தியா-டுடே, புரோப், சண்டே போன்ற ஏடுகள் சில மாதங்களுக்கு முன்பாகவே, கலைஞர்தான் முதல்வர் என அடித்துக் கூறியிருந்தன. 1989-ஆம் ஆண்டு தமிழகச் சட்டமன்றத் தேர்தல் நடந்தது.

தேர்தல் பிரச்சாரத்திற்காக தேசிய முன்னணியின் தலைவர்களான வி.பி.சிங், அஜீத் சிங், என்.டி.ராமராவ், தேவிலால் ஆகியோர் ஆதரித்து பிரச்சாரம் செய்தனர். இதற்கு முன்பாக காங்கிரசுக்கு எதிராக தேசிய முன்னணி கட்டமைக்கப்பட்டது. கலைஞர் அதில் முக்கியப் பங்கை வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. பெரும் வெற்றியைப் பெற்றது. அதன் விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| தி.மு.க. | - 151 |
| அ.தி.மு.க.(ஜெ) | - 29 |
| காங்கிரஸ் | - 26 |
| சி.பி.எம்.(எம்.) | - 15 |
| சி.பி.ஐ. | - 3 |
| ஜனதா தளம் | - 4 |
| அ.தி.மு.க. (ஜா) | - 1 |
| சுயேச்சை | - 5 |
| | ---- |
| | 234 |
| | ---- |

**எந்த வள்ளுவர் கோட்டத்தை நிர்மாணித்து அதன் திறப்பு விழாவில் புறக்கணிக்கப்பட்டாரோ - அதே வள்ளுவர் கோட்டத்தில் முதல்வராகக் கலைஞர் பதவியேற்றுக் கொண்டார். பதவி ஏற்பு விழாவுக்கு என்.டி.ராமராவ், இ.கே.நாயனார், வி.பி.சிங், இராம்விலாஸ் பஸ்வான் ஆகியோர் வந்து இருந்தனர்.**

**சுமார் 14 ஆண்டுகளுக்குப் பிறகு முதல்வர் பொறுப்பைக் கலைஞர் ஏற்றார். ஒரு பாரம்பரியமுள்ள கொள்கை தாக்கமுள்ள ஒரு பண்பாட்டு அரசியல் இயக்கத்தின், கட்சியின் நெடும்பயணம் அதிகாரத்தோடு மீண்டும் தனது பயணத்தைத் தொடங்கியது.**

1989-90ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை கலைஞர் - 1989 மார்ச் 25-ஆம் தேதியன்று சட்டமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். பேரவைத் தலைவர் தமிழ்க்குடிமகன் திருக்குறளை ஓதி அவை நிகழ்வுகளைத் தொடங்கினார். அப்போது குமரி அனந்தன் பிரச்சினையைக் கிளப்பினார்.

சட்டமன்றத்தில் கலைஞரைத் தாக்கிய காட்சி நடப்பதற்கு முன்னால் குமரி அனந்தனும் ஜெயலலிதாவும் உரிமை பிரச்சினைகளை எழுப்பி இருந்தார்கள். மார்ச் 18 (1989) ஜெயலலிதா சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகிவிட்டதாகப் பேரவைத் தலைவர்க்குக் கடிதம் அனுப்பி இருக்கிறார் என்கிற செய்தி




வெளியாகி உள்ளது. பிறகு இந்தக் கடிதம் ஜெயலலிதாவால் வழங்கப்பட வில்லை என்பதாகவும் கூறப்பட்டது. இதில் காவல் துறையினரின் தலையீடு உள்ளதாகவும், அதனால் ஜெயலலிதா பெரிதும் பாதிக்கப்பட்டார் என்பதாகவும் கூறப்பட்டது. இந்தக் கடிதம் பற்றியே உரிமைப்பிரச்சினையை ஒத்திவைப்புத்தீர்மானத்தை குமரி அனந்தனும், ஜெயலலிதாவும் எழுப்பினார்கள்.

ஆனால் பேரவைத்தலைவர் தமிழ்க்குடிமகன் உரிமைப் பிரச்சினையை அனுமதிக்க மறுத்துவிட்டார். மார்ச் 25-ஆம் தேதி சட்டமன்ற நிரலின்படி நிதி நிலை அறிக்கையை முதல்வரும் நிதியமைச்சருமான கலைஞர் தாக்கல் செய்ய வேண்டும் என்று பேரவைத் தலைவர் கூறினார். அதேபோல தாக்கல் செய்யுமாறு கலைஞரை அழைத்தார். கலைஞர் நிதிநிலை அறிக்கையைப் படிக்கத் தொடங்குகிறார். அ.தி.மு.க. ஜெ. பிரிவினர் நிதிநிலை அறிக்கையைக் கலைஞரின் கரத்திலிருந்து பிடுங்க முயன்றனர். பிறகு கிழித்து எறிந்தனர். வன்முறையில் இறங்கினர். அவையில் பலத்த அமளி ஏற்பட்டது. புத்தகங்களும் தாள்களும் வீசிக் கொள்ளப் பெற்றன.

**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க ஆய்வாளர்



முதல்வர் கலைஞரைத் தாக்க முயன்றனர். முதல்வர் நிதிநிலை அறிக்கையை படிக்க முற்படுகிறபோது - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரான ஜெயலலிதா,

"கூடாது எனது ஒத்திவைப்பு தீர்மானத்தை இப்போதே விவாதிக்க வேண்டும். ஒரு கிரிமினல் குற்றவாளி பட்ஜெட் தாக்கல் செய்யவிட மாட்டோம். அவர் ராஜினாமா செய்ய வேண்டும். கிரிமினல் குற்றவாளி பட்ஜெட் தாக்கல் செய்யக் கூடாது" என்று கூறுகிறார். அப்படிக் கூறிக் கொண்டே கலைஞர் கையிலிருக்கும் நிதிநிலை அறிக்கையை பிடுங்குகிறார். உதவிக்கு அவர் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் வருகிறார்கள். ஜெயலலிதாவும் செங்கோட்டையனும் முதல்வர் கையிலிருந்த நிதிநிலை அறிக்கையைப் பிடுங்குகிறார்கள். அதைப் பறித்து சு.திருநாவுக்கரசு கிழித்து எறிந்தார்.

"குத்துடா அவனை!" என்று ஜெயலலிதா கூச்சலிட செங்கோட்டையன் முதல்வர் மீது பாய்ந்து அவரது கையிலும் முகத்திலும் தாக்கினார். இன்னும் சில ஜெ - குழுவினர் பெரும் அமளியில் சபையில் ஈடுபட்டனர். அதையெல்லாம் விளக்க இந்த இடம் போதாது. அவ்வளவு செய்திகள் இருக்கின்றன. **கலைஞரை மு.கண்ணப்பன், க.சந்திரசேகர், ச.தங்கவேல், எல்.கணேசன் ஆகியோர் எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றினர். ஜெயலலிதாவின் சட்டமன்ற அமளி குறித்து நாளேடுகள் எல்லாம் எழுதின.**

ஜெயலலிதா விரும்பியதெல்லாம் இத்தகைய அமளிகள் மூலம் சபை நடவடிக்கையை 'ஸ்தம்பிக்க' வைத்து ஆட்சியைக் கலைத்துவிடலாம் என்பதே ஆகும். சட்டமன்ற அமளி குறித்து மிக விரிவான பேட்டி, ஒன்றினை கலைஞர் நாளேடுகளுக்கு அளித்தார்.

ஜெயலலிதா சட்டமன்றத்தில் அரங்கேற்றிய நிகழ்ச்சிகள் அனைத்தும் நடவடிக்கை குறிப்புகளில் இடம் பெற்று இருக்கின்றன. எம்.ஜி.ஆர். மரணத்திற்குப் பிறகு தான்தான் அவரின் வாரிசு என்று நிலைநாட்டிக் கொள்ள அதிகாரத்தில அமர ஜெயலலிதா ஆசைக் கொண்டார். அதனால் அமளியை உண்டாக்கினார். தோற்றுப் போனார்.

**டெல்லியோடு இணைந்த அரசியல் என்பது கலைஞர் 1971-லேயே தோற்றுவித்தது ஆகும். இந்திரா காங்கிரசோடு இலட்சிய உறவு, ஜனதா கட்சி உருவாக்கத்திற்குப் பங்களிப்பு எனக் கலைஞர் ஆற்றிய பணி - இந்தியா தழுவிய கூட்டணிக் கட்சிகளின் அமைப்புகள் தோன்றக் காரணமாயின. அதுபோல தேசிய முன்னணி தோற்றுவித்ததிலும் அவரின் பங்களிப்பு பெரிதும் இருந்தது.**

**1989-ஆம் ஆண்டு தமிழகத்தில் தி.மு.க.வின் தனித்த ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒன்றிய அரசியல் கழக பங்களிப்பு இருக்க வேண்டும் என்பதற்காகவும் நாடு தழுவிய பிரச்சினைகளில் கழகம் இடம் பெற வேண்டும் என்பதற்காகவும் 1988-இல் தேசிய முன்னணி தோற்றுவிக்கப்பட்டது. மேலும் அப்போது அது அரசியல் தேவையாக இருந்தது.**

கழக ஆட்சி நடந்து கொண்டிருந்த போதே நாடாளுமன்றத்திற்கான தேர்தல் 1989-ஆம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்றது. தமிழகத்தைப் பொருத்தவரை தி.மு. கழக அணி தோல்வியைச் சந்தித்தது.

1989-ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் பின்வருமாறு அமைந்து இருந்தன.

| | |
|---|---|
| மொத்த இடங்கள் | - 543 |
| தேர்தல் நடைபெற்ற இடங்கள் | - 525 |
| முடிவு அறிவிக்கப்பட்டவை | - 525 |
| **தேசிய முன்னணி** | |
| ஜனதா தளம் | - 141 |
| தெலுங்கு தேசம் | - 2 |
| காங்கிரஸ் (எஸ்) | - 1 |
| **தேசிய முன்னணியின் தோழமைக் கட்சிகள்** | |
| பாரதீய ஜனதா | - 88 |
| சி.பி.ஐ. (எம்) | - 32 |
| சி.பி.ஐ. | - 12 |
| **இந்திரா காங்கிரஸ் கூட்டணி** | |
| காங்கிரஸ் | - 193 |
| தேசிய மாநாட்டு கட்சி | - 3 |
| சுயேச்சைகள் | - 42 |

எனக் கட்சிகளின் நிலவரங்கள் இருந்தன. ஆனால் வி.பி.சிங் ஆட்சிதான் அமைந்தது. இதற்குக் காரணம் பாரதீய ஜனதாவும் கம்யூனிஸ்டுகளும் ஆதரித்தது தான். 1989 டிச.2-ஆம் தேதி பிரதமராகப் பொறுப் பேற்ற வி.பி.சிங் - 1990 நவ.10-ஆம் தேதி வரை பிரதமராக இருந்தார். தமிழகத்தில் ஒரு நாடாளுமன்றத் தொகுதியில் கூட தி.மு.க. வெற்றி பெற முடியவில்லை. இருப்பினும் வி.பி.சிங் அமைச்சரவையில் முரசொலி மாறன் 'கேபினெட்' அந்தஸ்துள்ள அமைச்சரானார்.

மண்டல் கமிஷன் பரிந்துரையை வி.பி.சிங் அரசு நடைமுறைப்படுத்த முயன்றபோது பா.ஜ.க. அது அளித்து வந்த ஆதரவைத் திரும்பப் பெற்றுக் கொண்டதால் ஆட்சிக் கவிழ்ந்தது. வி.பி.சிங் நம்பிக்கைத் தீர்மானத்தின் மீது ஆதரவாக 142 வாக்குகள்தான் பெற்றார். எதிர்ப்பாக 346 வாக்குகள் பெற்றார். வி.பி.சிங் தனது விலகல் கடிதத்தைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தார். அதன் பிறகு சந்திரசேகர் இந்தியாவின் 8- ஆவது பிரதமராகப் பதவியேற்றுக் கொண்டார்.

தமிழகத்தில் பெரும்பான்மைப் பெற்று ஆட்சியில் இருந்த கலைஞர்க்கு இடையூறு செய்ய இப்போது எளிதாயிற்று. ஆளுநரின் பரிந்துரை இல்லாமலேயே குடியரசுத் தலைவராக இருந்த ஆர்.வெங்கட்ராமன் 1991 ஜன.30-ஆம் தேதி இரவு தி.மு.க. அரசைக் கலைத்தார். தி.மு.க. அரசு கலைக்கப்பட்டதற்கு முழுமுதற் காரணம் ஜெயலலிதாவே! தி.மு.க. ஆட்சிக் கலைப்பை 'இண்டிபெண்டன்ட்' ஏடும் 'இந்து'வும் பலத்த கண்டனம் செய்து இருந்தன. இதைப் பற்றிய அரசியல் 'அடாவடித்தனங்களை'க் கலைஞர் முரசொலியில் மக்களுக்கு எடுத்து வைத்தார்.

தொடர்ச்சி... நாளை



துணை முதல்வராகப் பொறுப்பேற்கும் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உழைப்பின் உயர்வை கொண்டாடும் விதமாக திருப்பத்தூர் நகர கழக செயலாளர் வழக்கறிஞர் எஸ்.ராஜேந்திரன் தலைமையில் நகரம் பேருந்து நிலையம் அருகே பட்டாசுகள் வெடித்தும் இனிப்புகள் வழங்கியும் கொண்டாடப்பட்டது. கழக நிர்வாகிகள் மகாலிங்கம், கோ.செல்வம், நகர மன்ற துணை தலைவர் ஏ.ஆர். சபியுல்லா, மாவட்ட கழக அணிகளின் நிர்வாகிகள் மே. சார்லஸ் நவீன் குமார், க.நதிம் அஹமத், ப.தௌலத் பாஷா, டி. நாகு மற்றும் நகர நிர்வாகிகள் மற்றும் அணிகளின் நிர்வாகிகள் டி.எஸ். மாதேஷ்வரன், எம். சிவா, சங்கர், சரவணன், வெங்கடேசன், ரமேஷ்,வீரராகவன், பழனி, ரமணன், கார்த்திக, ஜெயானந்த்,தீபக், திவாகர், விஜயகாந்த், ராஜ்குமார்,தினேஷ், பெருமாள், தீனா, மணி, வீரா, ரசாக் பாலாஜி, சக்தி, சாதிக், ஐயாஸ், மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

### ஓசூர் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர் தொண்டர் அணியின் ஓசூர் மாநகர அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்**
**ஓசூர் மாநகரம்**

**அமைப்பாளர் -** **சாந்தி,**
131,நந்தவனம் லேஅவுட்,
பேடரப்பள்ளி,
ஓசூர், கிருஷ்ணகிரி.

துணை அமைப்பாளர்கள் – அப்ஸராபானு, சிவகுமார் நகர், ஓசூர், கிருஷ்ணகிரி. சரசு, 4/280ஏ, காமராஜ் நகர், ஓசூர், கிருஷ்ணகிரி. கல்யாணி, எல்.ஐ.ஜி.ராயக்கோட்டை ஹட்கோ, ஓசூர், கிருஷ்ணகிரி. சந்திரலேகா, 3/1812, இந்திரா நகர், பேடரப்பள்ளி, ஓசூர், கிருஷ்ணகிரி. அற்புதம், காமராஜ் நகர், சிப்காட், ஓசூர், கிருஷ்ணகிரி.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை – 18
நாள்– 30.09.2024

**நாமக்கல் ப.இராணி**
செயலாளர்
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

## தி.மு.க. மகளிர் அணி

### ஓசூர் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர் அணியின் ஓசூர் மாநகர அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்**
**ஓசூர் மாநகரம்**

**அமைப்பாளர் -** **சுனந்தா,**
ஜனவர் தெரு,
ஓசூர்,
கிருஷ்ணகிரி.

துணை அமைப்பாளர்கள் – அமராவதி, 4/56Z161,சீதாராம் நகர், ஓசூர், கிருஷ்ணகிரி. கமலா, 22/18,பாரதிதாசன் நகர், ஓசூர், கிருஷ்ணகிரி. சுந்தரம்மாள், பி111, ஹவுசிங் காலனி, ஓசூர், கிருஷ்ணகிரி. ஷாமலா, பி111, ஹவுசிங் காலனி, ஓசூர், கிருஷ்ணகிரி. அனிதா, பி111, ஹவுசிங் காலனி, ஒசூர், கிருஷ்ணகிரி.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை – 18
நாள்– 30.09.2024

**ஜெ. ஹெலன்டேவிட்சன்,**
செயலாளர்
தி.மு.க. மகளிர் அணி